


– வாழ்வோம்

‘பெரியார் அறிவுலக’ நூல் கொள்முதலில் சர்ச்சை வெடித்துள்ள நிலையில்.. தி.மு.க. அரசின் வெளிப்படைத் தன்மை குறித்து பிரபாகரன் அழகர்சாமி எழுதியுள்ள பதிவு, கவனம் ஈர்த்துள்ளது.

அவரது பதிவில், ‘20 புத்தகங்கள் பதிப்பித்துள்ள மிகச்சிறிய பதிப்பாளர் என்கிற வகையிலும், கடந்த தி.மு.க. ஆட்சியில் நூலகங்களுக்குப் புத்தகங்கள் கொள்முதல் செய்ய நடைமுறைப் படுத்தப்பட்ட ஒற்றைச் சாளர முறையில், மிகச்சிறிய அளவில் பயன்பெற்ற பதிப்பாளர் என்கிற வகையிலும் இதை எழுதுகிறேன்.

நூலகங்களுக்குப் புத்தகங்கள் கொள்முதல் செய்வதில் பன்னெடுங்காலமாகவே இடைத்தரகர்களின் ஆதிக்கம் கொடிகட்டிப் பறந்து வந்துள்ளது. கடந்த காலங்களில், 20% முதல் 30% வரை கமிஷன் கொடுக்காமல் புத்தகங்களை நூலகங்களுக்குக் கொடுக்க முடியாது என்கிற நிலைதான் எல்லா ஆட்சிக் காலங்களிலும் இருந்தது. மிகப்பெரிய பதிப்பகங்கள் இதிலிருந்து தப்பியிருக்கலாம். மட்டமான, மலிவான மட்டித் தாளில் (NEWSPRINT QUALITY PAPER) நூலகங்களுக்கான புத்தகங்களை அச்சிடும் மோசடியும் பல காலமாக நடந்துவந்துள்ளது.

**பாராட்டப்பட வேண்டிய தி.மு.க.வைப் ‘பலிகடா’ ஆக்குவதா?**

இந்த நிலையை ஒழித்து, ஒற்றைச் சாளர முறையை 2024-ஆம் ஆண்டு தி.மு.க. அரசு அறிமுகப்படுத்தியது. பதிப்பாளர்கள் தங்கள் புத்தகங்களை நேரடியாக அரசின் இணையதளத்தில் விண்ணப்பிக்கலாம். கண்டிப்பாக ஐ.எஸ்.பி.என். (ISBN) பெற்றிருக்க வேண்டும்; அச்சிடப்படும் தாள்கள் குறிப்பிட்ட தரத்தில் இருக்க வேண்டும்; கேள்விகளை நிவர்த்தி செய்வதற்கு நேரடியாக அரசின் உதவி எண் (HELP-LINE); இப்படி நிறைய விதிமுறைகளுடன் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.


இதனால் பயன்பெற்ற பதிப்பாளர்கள் ஏராளம். பல ஆண்டுகளாக இடதுசாரி நூல்களை வெளியிட்டு வரும் `எதிர் வெளியீடு' பதிப்பாளர், நூலக ஆணை என்பது தனக்கு எட்டாக்கனியாக இருந்தது; முந்தைய தி.மு.க. ஆட்சியின் ஒற்றைச் சாளர முறைதான் அதை உடைத்தது என்பதை வெளிப்படையாக நேற்று எழுதியிருக்கிறார். தமிழ்நாட்டின் முன்னணி பதிப்பகமும் பெருமாள் முருகனுடைய புத்தகங் களைப் பெரும்பாலும் பதிப்பித்தவரும், பல ஆண்டுகளாக நூலக ஆணை பெற்று வருபவருமான காலச்சுவடு கண்ணன், முந்தைய தி.மு.க. ஆட்சியில் கொண்டுவரப்பட்ட இந்த புதிய ஒற்றைச் சாளரத் திட்டத்தை ஆதரித்து, நேற்றுகூட எழுதியிருக்கிறார். இவை யாவும்,10 காசு இலஞ்சம் கொடுக்காமல், இடைத்தரகர்களுக்குக் கமிஷன் கொடுக்காமல், யாரிடமும் பரிந்துரைக்கு என்று போகாமல் சத்தமில்லாமல் நடந்த ஒரு சிறப்பான மாற்றம்' என நீள்கிறது அவரது பதிவு.

# உயர்நிலைக் குழு கலைக்கப்பட்டது!

ஒன்றிய-மாநில உறவுகள் குறித்து ஆராய்வதற்காக, கடந்த ‘திராவிட மாடல் ஆட்சி’ காலத்தில் ஓய்வுபெற்ற நீதி அரசர் குரியன் ஜோசப் தலைமையில் அமைக்கப்பட்ட உயர்நிலைக் குழுவை, ஆளும் த.வெ.க. அரசு கலைத்துள்ளது. இந்தக் குழு, தனது அறிக்கையின் முதல் பகுதியை இந்தாண்டு பிப்ரவரி மாதம், அன்றைய தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் ஒப்படைத்தது.

‘மாநிலத்தில் சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி’ என்று வெறும் முழக்கங்களுடன் நிறுத்திக் கொண்ட மாநிலமல்ல தமிழ்நாடு. அத்தகைய சுயாட்சியை மாநிலங்களுக்கு வழங்க பல்வேறு முன்னெடுப்புகளை எடுத்துள்ளது. 1969-ஆம் ஆண்டு, கழக அரசால் அமைக்கப் பட்ட ‘ராஜமன்னார் குழு’, உண்மையான கூட்டாட்சி அமைப்பினை ஏற்படுத்திடும் வகையில், அரசமைப்புச் சட்டத்தைத் திருத்திட ஒன்றிய அரசை வலியுறுத்தியது. அதைத் தொடர்ந்து ஒன்றிய அரசு, ‘சர்க்காரியா ஆணை’யத்தையும் (1983-1988), பின்பு, ‘பூஞ்சி ஆணைய’த்தையும் (2007-2010) ஒன்றிய-மாநில உறவுகள் குறித்து ஆராய அமைத்தாலும், அவை வெறும் காகிதங்களாக மட்டுமே எஞ்சிப்போயின.

‘பா.ஜ.க. என்ற பெரும் பூதம்’, ஒன்றியத்தில் அதிகாரங்களை எல்லாம் குவித்துக்கொண்டி ருக்கும்போது, அதற்கு எதிர்த்திசையில் அதிகாரப் பரவலாக்கத்தையும், கூட்டிசைவுக் கூட்டாட்சியையும் வலியுறுத்தி அமைக்கப்பட்ட குரியன் ஜோசப் தலைமையிலான இந்தக் குழு வழங்கிய அறிக்கையின் முதல் பகுதி, மிகுந்த நம்பிக்கையை விதைத்தது. தமிழ், ஆங்கிலம் என்ற இருமொழிகளிலும் வெளியான இந்த அறிக்கை, இலவசமாகப் படிக்கக் கிடைக்கிறது.




**கௌதம் ராஜ்**

பதிப்பகம் 140

**சுயமரியாதை - சமத்துவம் - சமூக நீதி நிரம்பிய உலகைப் படிக்க, படைக்க அவசியமான புத்தகங்களை வாரந்தோறும் அறிமுகம் செய்கிறது இந்தப் பகுதி...**


வெறும் நிர்வாகரீதியான பொருண்மைகளை மட்டும் விவாதிக்காமல், அதிகார பரவலாக்கம் என்பது எந்தெந்த விதத்தில் எல்லாம் அவசிய மானது என்பதை இவ்வறிக்கை கவனப்படுத் துகிறது. ‘அதிகார பரவலாக்கம்’ ஏன் அவசியம் என்பதை வலியுறுத்தும் ‘தன்னுரிமை வாதம்’; உத்திசார் கவனம் குறித்த வாதம்’, ‘மக்களாட்சி முறை சார்ந்த வாதம்’, ‘பொருளாதார வாதம்’, ‘மீள்திறன் சார்ந்த வாதம்’ எனப் பல்வேறு கோட்பாடுகளை மையமாகக் கொண்டு, இந்நூலில் விவாதிக்கப்பட்டுள்ளது. அனைத்து வாதங்களும் வலியுறுத்துவது, மாநிலங்களுக்கு உரிய அதிகாரத்தை, சுதந்திரமாக இயங்கும் திறனை, சுயாட்சி வழங்க வேண்டும் என்பது தான். ‘அரசமைப்புச் சட்டத் திருத்தம், ‘மாநிலங் களின் ஆட்சி நில ஒருமைப்பாடு’, ‘மொழி’, ‘ஆளுநர்’, ‘தொகுதி மறுவரையறை’, ‘தேர்தல்கள்’, ‘கல்வி’, ‘சுகாதாரம்’, ‘சரக்கு மற்றும் சேவை வரி’ ஆகிய முக்கிய அம்சங்கள் குறித்து, இந்த நூலில் பேசப்பட்டுள்ளது.

ஆளுநர்கள் மாநில சட்டமன்றத்தின் பெரும் பான்மையின் அடிப்படையில், தேர்வுசெய்யப் பட வேண்டும் எனவும் அவரது ஆட்சிக்காலம் ஐந்து ஆண்டுகளாக நிர்ணயம் செய்யப்பட வேண்டும் எனவும் இந்த ஆணையம் பரிந்துரை செய்துள்ளது. அதைப் போலவே தொகுதி மறுவரையறை என்பது, அடுத்த 100 ஆண்டுகளுக்கு மக்கள்தொகையை அடிப்படையாகக் கொண்டு நடத்தப்படக் கூடாது என்றும் இந்த ஆணையம் பரிந்துரை செய்துள்ளது.

இப்படி மாநில சுயாட்சியை உறுதிசெய்யப் பல்வேறு பரிந்துரைகள் இருந்த காரணத்தால், பா.ஜ.க. அரசுக்கு அஞ்சி, இந்த ஆணையத்தைக் கலைத்துள்ளது. இருந்தாலும், முதல் பகுதியில் உள்ள கருத்துகள் மற்றும் பரிந்துரைகளை வைத்துப் பார்த்தாலே, வரலாற்றில் தனக்கான இடத்தை உறுதிசெய்துகொண்டது இந்தக் குழு என்றுதான் சொல்ல வேண்டும்.

**...வாசிப்போம்.**

# ‘நெஞ்சுக்கு நீதி’ முழுமைபெறுமா?



**பாப்பாக்குடி இரா.செல்வமணி, திருநெல்வேலி**

**முத்தமிழறிஞர் கலைஞரின் வாழ்க்கை வரலாறான ‘நெஞ்சுக்கு நீதி’ 2006-ஆம் ஆண்டுடன் நிற்கிறது. 2018-ஆம் ஆண்டு வரையிலான மீதமுள்ள 12 ஆண்டுக்கால அவரது வாழ்க்கையையும் சேர்த்துப் பதிவு செய்து முழுமையாக்குவதற்குத் தலைமைக் கழகம் முயற்சி எடுக்குமா?**

‘நெஞ்சுக்கு நீதி’ என்பது கலைஞரின் தன் வரலாறு (சுயசரிதை). அதை அவரது எழுத்துதான் நிறைவு செய்யமுடியும். அதற்குக் காலம் இடம்தரவில்லை. உலக வரலாற்றில் பல தலைவர்கள் தங்கள் சுயசரிதையை எழுதியிருக்கிறார்கள். 80 வயது வரை வாழ்ந்தவரான உத்தமர் காந்தியடிகள் ‘சத்திய சோதனை’ என்ற பெயரில் எழுதிய தன் வரலாறு, அவருடைய 52-வது வயது வரையிலான வாழ்க்கையை மட்டுமே பதிவுசெய்துள்ளது. மீதமுள்ள 28 ஆண்டுகளை அவரது போராட்டங்கள், கட்டுரைகள், பயணங்கள் பற்றிய குறிப்புகள் நிறைவு செய்கின்றன. கலைஞரைப் பொறுத்தவரை, தன் 94-வது வயது வரையிலான வாழ்வில் 82 ஆண்டுகளை அவரே தன் எழுத்தில் பதிவு செய்திருக்கிறார். தனது வாழ்க்கை, கழகத்தின் வரலாறு, தமிழ்நாட்டிலும் இந்திய அளவிலும் நடந்த அரசியல் போக்குகள், உலக அளவிலான நிகழ்வுகள் அனைத்தையும் ‘நெஞ்சுக்கு நீதி’யின் ஆறு பாகங்கள் நமக்கு வழங்குகின்றன. ‘முரசொலி’யில் கலைஞர் எழுதிய கடிதங்களின் தொகுப்புகள், அவரது மிச்சமுள்ள 12 ஆண்டுக்கால வாழ்வை நமக்கு விளக்கும். கலைஞரைப் பற்றிய பலரது கட்டுரைகளும் புத்தகங்களும் கூடுதல் விவரங்களைத் தரும். ‘நெஞ்சுக்கு நீதி’யை கலைஞரைத் தவிர, வேறு யாராலும் தர முடியாது.

**மு.சந்தோஷ்குமார், சென்னை**

**அந்நிய முதலீடு இனி நமக்கு அந்நியம்தானா?**

இந்தியாவில் 1991-ஆம் ஆண்டு, புதிய பொருளாதாரக் கொள்கை நடைமுறைக்கு வந்தபிறகுதான், பன்னாட்டு நிறுவனங்களின் அந்நிய நேரடி முதலீடுகள் வரத்தொடங்கின. அப்போது, தமிழ் நாட்டில் ஜெயலலிதா தலைமையிலான அ.தி.மு.க ஆட்சி நடந்தது. அந்த ஆட்சி நிர்வாகத்தின் அலங்கோலத்தால் தமிழ்நாட்டிற்கு வரவேண்டிய அந்நிய முதலீடுகள் தேங்கி நின்றன. 1996-இல் கலைஞர் முதல்வரானார். முதலீடுகள் குவிந்து, தொழிற்சாலைகள் பெருகி, வேலைவாய்ப்பும் பொருளாதாரமும் வளர்ந்தன. கார் உற்பத்தியில் சென்னை, ‘இந்தியாவின் டெட்ராய்டு’ என்று பெயர் பெற்றது. பின்னர் 2011-ஆம் ஆண்டு முதல் 2021-ஆம் ஆண்டு வரையிலான பத்தாண்டுக்காலம் தமிழ்நாட்டிற்கான முதலீடுகள் பிற மாநிலங்களுக்குப் போய்க்கொண்டிருந்தன. 2021-இல் ‘திராவிட மாடல் ஆட்சி’ அமைந்ததும் மீண்டும் தமிழ்நாட்டை நோக்கி முதலீடுகள் குவிந்தன. பரவலான வளர்ச்சியைத் தமிழ்நாடு பெற்றது. இப்போது, மீண்டும் 1991-ஆம் ஆண்டு காலகட்டத்திற்குத் தமிழ்நாட்டைத் தள்ளி, ஆந்திரா, மகாராஷ்ட்ரா, கர்நாடகா உள்ளிட்ட மாநிலங்களுக்கு முதலீட்டைத் தாரைவார்த்துக்கொண்டிருக்கிறது, த.வெ.க.அரசு. அந்நியமாகிவரும் அந்நிய முதலீடு, கழக ஆட்சி மலர்ந்ததும் அன்யோன்யமாகிவிடும்.

**வி.தியாகு, திருவாரூர்.**

**நியாயமாகப் பதில் சொல்வாரா திராவிடன்... தி.மு.க.வினர் கொள்கைப் பிடிப்புடன் இருக்கிறார்களா?**

கொள்கைதான் தி.மு.க.வின் வலிமை. அந்தக் கொள்கைப் பயணத்தின் அணுகுமுறைகளில் சில மாறுபாடுகள் இருக்கலாம். ‘பொதுச்செயலாளர் வீட்டுத் திருமணம் ஏன் புரோகித முறையில் நடந்தது?’ என்று சமூக வலைதளங்களில் கேள்வி கேட்டவர்கள், கொள்கைப் பிடிப்பு மிக்க தி.மு.க.வினர்தான். அதற்குரிய விளக்கத்தையும் பொதுச்செயலாளரிடமிருந்து அவர்கள் பெற்றுவிட்டனர். 90 வயதைக் கடந்த மூத்த உடன்பிறப்பு, சோழவந்தான் காசி அய்யா அவர்களின் கழகத் தொண்டையும், அவர் நம் கழகத் தலைவர், துணைப் பொதுச்செயலாளர், இளைஞர் அணிச் செயலாளர் உள்ளிட்டவர்களைச் சந்தித்ததையும் பெருமையுடன் சமூக வலைதளங்களில் பதிவிட்டவர்களும் கொள்கை உறுதிமிக்க தி.மு.க.வினர்தான். கட்சியில் உயர்பதவியோ, கடைக்கோடித் தொண்டனோ யாராயினும் கொள்கைதான் முக்கியம் என்பதில் நியாயமான விமர்சனப் பார்வையுடன் உண்மையான உடன்பிறப்புகள் உறுதியாக இருப்பார்கள்.

**(திராவிடன் பதில்கள் பகுதிக்கு உடன்பிறப்புகள், வாசகர்கள் தங்கள் கேள்விகளை அனுப்பலாம். வாட்ஸ்ஆப் எண்-82204 51520)**

திராவிடன் பதில்கள் 08

# ஃப்ளாஷ்பேக்



**பி.வேலன்**



## தலைவர் கைதைக் கண்டித்துப் போராட்டம்!

**2014**-ஆம் ஆண்டு, அன்றைய கழகப் பொருளாளர், இன்றைய கழகத் தலைவர் அவர்கள், திருவாரூர் கழக நிகழ்ச்சிகளுக்குச் சென்றபோது, அவருடன் பயணித்துக்கொண்டிருந்த திருவாரூர் மாவட்டச் செயலாளர் பூண்டி கலைவாணன் அவர்களை, காவல் துறை அராஜகமாகக் கைதுசெய்ய முற்பட்டது. அப்போது, அதைக் கண்டித்து, சாலை மறியல் போராட்டம் செய்த தலைவர் மற்றும் முன்னணி நிர்வாகிகள் கைதுசெய்யப்பட்டனர். அதையடுத்து, தலைவரை உடனடியாக விடுவிக்க வேண்டும் என தமிழ்நாடு முழுவதும் போராட்டம் தீயாகப் பரவியது. சென்னையில் பலர் கைதுசெய்யப்பட்டோம். நாங்கள் விடுதலையடைந்த பின்னர், அன்பகத்தில் தலைவர் கரங்களால் சால்வை அணிவித்துப் பாராட்டியது மறக்க முடியாதது.

**– பி.வேலன்,**
**பகுதிப் பிரதிநிதி, 118(அ) வட்டம்,**
**ஆயிரம்விளக்கு கிழக்குப் பகுதி, சென்னை மேற்கு.**

இதுபோன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்பவேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018
வாட்ஸ்அப் எண்: 82204-51520 மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

Published and Printed by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034
Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Ph: 044 - 45849900